ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

**අංක 2441/ 59 - 2025 ජූනි මස 21 වැනි සෙනසුරාදා - 2025.06.21**

2441/59 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 94/47 (viii) (B)

**(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டம்**

6(2)(ஆ) மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவுகளின் கீழான கட்டளை

(269 ஆம் அத்தியாயமான) நாடு, நகரத் திட்டமிடல் கட்டளைச் சட்டத்தின் 6(2)(ஆ) என்னும் பிரிவாலும் மற்றும் 21(2)(ஆ) என்னும் பிரிவாலும் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சரான அநுர கருணாதிலக்க ஆகிய நான், இக்கட்டளை மூலம். -

(அ) இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட "மஹா மந்திந்த பிரிவென் விஹாரை" என அழைக்கப்படும் காணி இடப்பரப்பானது மேற்சொல்லப்பட்ட கட்டளைச் சட்டத்தின் நோக்கத்துக்காக, நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக இருத்தல் வேண்டுமென வெளிப்படுத்துகின்றேன் ; அத்துடன்

(ஆ) நகர அபிவிருத்தி இடப்பரப்பொன்றாக மேலே வெளிப்படுத்தப்பட்டதான மஹா மந்திந்த பிரிவென் விஹாரைக்கு பௌதிக உருவரை வரைபடமொன்று தயாரிக்கப்பட வேண்டுமெனப் பணிக்கின்றேன்.

**அநுர கருணாதிலக்க,**
நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர்.

கொழும்பு,
2025, யூன் 18.

1A - G44605 - 09 (2025/06)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை

### மஹா மந்திந்த பிரிவென் விஹாரை இடப்பிரதேசத்தை உள்ளடக்கிய காணியின் இடப்பிரதேசம்

தென் மாகாணத்தில், மாத்தறை மாவட்டத்தில், மாத்தறை பிரதேச செயலாளர் பிரிவினுள், இல 414 சீ, இசடின் நகரம் எனும் கிராம அலுவலர் பிரிவின், வலிவேரிய எனும் கிராமத்தில் அமைந்துள்ள, வரி மதிப்பீட்டு இல. 47, வெலேகொட வீதி, வெலிவேரியா வத்த அல்லது மஹா மந்திந்த பிரிவென் என அழைக்கப்படுகின்றதான காணிகளின் நில அளவையாளர் தலைமையதிபதியின் 2023, நவெம்பர் மாதம் 30 ஆந் திகதியைக் கொண்ட சுவட்டுத்திட்ட இலக்கம் MR/MTR/2022/749 என்பதில் குறித்துக் காட்டப்பட்டுள்ளவாறாக துண்டுகள் A மற்றும் B என்பவற்றின் எல்லாத் துண்டுகளும் மற்றும் 1.0872 ஹெக்டயார் விஸ்தீரணத்தைக் கொண்டுள்ள காணிகளின் சொல்லப்பட்ட துண்டுகளும் மற்றும் அதன் எல்லைகளும் பின்வருமாறு : -

**துண்டு "ஏ" - இட அரசிறை இல. 47, வெல்கொட வீதி, வெலிவேரியா வத்த அல்லது மஹா மந்திந்த பிரிவெனா - 0.5708 ஹெக்டயார் (1 - ஏ, 1 - றூ, 25.7 - பே)**

வடக்கு: விஹாரையின் பிரதான பதவியிலுள்ளவரினால் உரிமை கோரப்படும் பத்தே பன்சல வீதி மற்றும் சொந்தக்காரர் அறியப்படாத பலுகலே ; கிழக்கு : மாத்தறையில் அமைந்துள்ள முதனிலை வரைபட இல. 2417 இல் விபரிக்கப்பட்டுள்ளதான துண்டு இல. 56 ; தெற்கு : துண்டு B ; மேற்கு : விஹாரையின் பிரதான பதவியிலுள்ளவரினால் உரிமை கோரப்படும் பெத்த பன்சல.

**துண்டு "பி" - வரி மதிப்பீட்டு இல. 47, வெல்கொட வீதியில் அமைந்துள்ள வெலிவேரியா வத்த அல்லது மஹா மந்திந்த பிரிவெனா - 0.5164 ஹெக்டயார் (1 - ஏ, 1 - றூ, 4.2 - பே)**

வடக்கு: துண்டு A ; கிழக்கு : மாத்தறையில் அமைந்துள்ள முதனிலை வரைபட இல. 2417 இல் விபரிக்கப்பட்டுள்ளதான துண்டு இல. 56 ; தெற்கு : மாத்தறையில் அமைந்துள்ள முதனிலை வரைபட இல. 2417 இலுள்ள துண்டு இல. 56 மற்றும் சுனந்தா மாவத்தை ; மேற்கு : வீதி மற்றும் விஹாரையின் பிரதான பதவியிலுள்ளவரினால் உரிமை கோரப்படும் பெத்த பன்சல.

EOG 06 - 0196

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.